IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 40/2018 P.W. 2/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ரவி | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. வறுவேல் | **Age** | : | |
| **Address** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.05.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 12.07.1991ம் தேதி மாலை 05.45 மணியளவில் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் எனக்கும் முன்விரோதம் இருந்தது. அவர் என்னை அடிக்கடி முறைப்பார். நான் அதை பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. அன்றையதினம் நான் மாலை 05.45 மணியளவில் பத்தறை பட்டாளம் கடை முன்பு 3 நபர்கள் இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள். அவர்கள் முகத்தை கைக்குட்டையால் மூடி இருந்தார்கள்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை பார்த்து புண்டை மொவேனே என்று தகாத வார்த்தையால் பேசி அவர் மறைத்து வைத்திருந்த அரிவாளால் எனது இடதுகையிலும், தோள்பட்டையிலும், பெருவிரலிலும் வெட்டினார். நான் சத்தம் போட்டேன். அப்பொழுது முருகனும் ஞானமுத்து என்பவர்களும் வந்து விட்டார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு அங்கிருந்து சென்று விட்டார். நான் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன்.

3. போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 5 ராஜன் எனது அம்மாவின் அக்கா மகன் என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் சாட்சி ராஜனின் சித்தப்பா மகன் என்றால், சரிதான். அது அண்ணன் முறை வரும் என்றால், சரிதான். ராஜனின் தந்தைக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தந்தைக்கும் இடையே சொத்தில் பாகம் பிரிப்பது குறித்து முன்விரோதம் உள்ளது என்றால், சரிதான். அது சம்மந்தமாக உரிமையியல் வழக்கு நடந்து குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தந்தைக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால், தெரியாது. நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2. நானும் ராஜனும் மற்றும் ராஜனுக்கு ஆதரவாக 2 நபர்களும் சேர்ந்து குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தந்தையை வெட்டி கொலை முயற்சி செய்த குற்றத்திற்காக பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று அதில் எங்களுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவரது தந்தைக்கு ஒரே மகன் என்றால், சரிதான்.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தந்தை தமிழ்நாடு அரசு கூட்டுறவு கடன் சங்கத்தில் முதன்மை எழுத்தாளராக பணியில் உள்ளார் என்றால், பணியில் இருந்தார். ஆனால், தற்சமயம் இல்லை. இவ்வழக்கிற்காக தற்பொழுது அவர் அந்த வேலையில் இல்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சம்பவ தேதியன்று என்னை 3 நபர்கள் வெட்டினார்கள் என்றால், சரிதான். அவர்கள் பலமாக ஓங்கி வெட்டினார்கள் என்றால், சரிதான்.

4. நான் போலிசாரிடம் கொடுத்த புகார்வாக்குமூலத்தில் 3 நபர்களும் சேர்ந்து வெட்டினார்கள் என்று கூறினேன் என்றால், சரிதான். இச்சம்பவத்தில் எனக்கு காயம் ஏற்பட்டு எனது உடைகளில் இரத்தக்கறை படிந்தது என்றால், சரிதான். என்னை போலிசார்கள் எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். போலிசார் என்னை விசாரணை செய்யும் பொழுது எனது இரத்தம் படிந்த ஆடைகளை கொடுத்தேனா என்றால், இல்லை.

5. இவ்வழக்கில் 3 நபர்கள் மீது புகார் கொடுக்கப்பட்டு அதில் 2 நபர்கள் நீக்கம் செய்யப்பட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது மட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை

அடுத்து நான் நீக்கம் செய்த இரு நபர்கள் மீது எந்த ஒரு சட்டநடவடிக்கையோ காவல்நிலைய புகாரோ எடுக்கவில்லை என்றால், அவர்கள் நீக்கம் செய்யப்பட்ட விவரம் எனக்குத் தெரியாது. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

6. இவ்வழக்கில் பலமுறை நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டும் காவலர்கள் நேரடியாக வந்து என்னிடம் தகவல் கூறியதற்கு பிறகும் நான் நீதிமன்றத்திற்கு வராமல் இருந்தது இந்த வழக்கு உண்மை வழக்கு அல்ல என்பதால் தான் என்றால், சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகே வீடுகள் உள்ளது என்றால், உள்ளது. ஆனால் அதில் யாரும் வசிக்கவில்லை. மேற்படி சம்பவயிடத்திற்கு அருகே சந்திரன் வீடு உள்ளது என்றாலும், அதில் அவர் வசித்து வருகிறார் என்றாலும், நான் பொய்யாக யாரும் வசிக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

7. சாட்சி ராஜனோடு சேர்ந்து குற்றம் சுமத்தப்பட்ட நபரை பழிவாங்கும் எண்ணத்தோடும் அவரை அரசுப்பணியில் இருந்து நீக்கம் செய்வதற்காகவும் தொடுக்கப்பட்ட பொய் வழக்கு என்றாலும், அதில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபரால் எனக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 40/2018 P.W. 3/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜன் (எ) ஜோஸ் சுபாஷ் ராஜன் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. வறுவேல் | **Age** | : | |
| **Address** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.05.2025.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அவர் எனது சித்தி மகன் ஆவார். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ரவி என்பவருக்கும் மரிய ஸ்டேன்லி என்பவருக்கும் பத்தறை அருகே வைத்து சண்டை நடப்பதாக எனக்கு போன் வந்தது. நான் எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டு சண்டை நடந்த இடத்திற்கு சென்றேன். ரவி அங்கு ரத்தக் காயத்துடன் இருந்தார். நான் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து சிகிச்சைக்காக அவரை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது அப்பாவின் தம்பி மகன் என்றால், சரிதான். எனது தந்தைக்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தந்தைக்கும் இடையே சொத்தில் பாகம் பிரிப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால், இல்லை. நானும் ரவியும் மற்றும் இருவரும் சேர்ந்து குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தந்தை வெட்டி காயப்படுத்தியது சம்மந்தமாக வழக்கு நடைபெற்றது என்றால், சரிதான். நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இரணியலில் என் மீது குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால், சரிதான்.

2. இவ்வழக்கில் காயம்பட்ட நபரான ரவி என்பவரை நான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.

IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 40/2018 P.W. 4/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ரகு | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. கிருஷ்ணபிள்ளை | **Age** | : | |
| **Address** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.05.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து அஞ்சல்துறையில் வேலை செய்து பணி ஓய்வு பெற்று விட்டேன். 2012ம் வருடம் மாலை 06.00 மணியளவில் நான் வேலை முடித்து பத்தறை அருகே வந்தபோது போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்ததாகவும் கையொப்பம் போட கேட்டதால் நான் போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154—ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 13.07.2011ம் தேதி 07.00 மணிக்கு குளச்சல் காவல் ஆய்வாளர் சம்பவயிடமான பத்தறை என்னும் இடத்தில் பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அந்த பார்வைமகசரில் நானும் மெலாடு என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்சமயம் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.